# கிராமிய சேவைத் திட்டம்

---

**திருச்சிராப்பள்ளி மண்டலம்**
**பெரம்பலூர் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை**
**தொண்டமாந்துறை கிராமம்**

---




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

- நோயற்ற வாழ்வு
- கல்வியில் மேன்மை
- சுற்றுப்புற சுகாதாரம்
- முதியோரைப் பாதுகாத்தல்
- மகளிர் மேம்பாடு
- குடும்ப அமைதி
- கர்மயோக வாழ்க்கைநெறி
- மனிதநேயம்
- மதநல்லிணக்கம்
- சமுதாய விழிப்புணர்வு

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# திருச்சிராப்பள்ளி மண்டலம்
# பெரம்பலூர் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# தொண்டமாந்துறை கிராமம்

## Contents


1. செயல்பாட்டு அறிக்கை.....3

2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்.....4

3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்.....4

4. தொண்டமாந்துறை கிராமத்தின் தொடக்கவிழா.....5

5. மருத்துவ முகாம்.....7

6. மனநல ஆலோசனை முகாம்.....7

7. மரக்கன்று வழங்குதல் & சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்.....7

8. மதுஒழிப்பு முகாம்.....8

9. மனைவிநல வேட்பு தினம்.....8

*11.* அனுபவ உரை.....9

*12.* எதிர்காலத் திட்டங்கள்:.....15

*13.* வாழ்த்து:.....15

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | **தொண்டமாந்துறை** | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | **22-02-2024** | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | **22.07-2023** | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | **5 மாதங்கள்** | | |
| 5. | மண்டலம் | **திருச்சிராப்பள்ளி** | | |
| 6. | அறக்கட்டளை | **பெரம்பலூர்** | | |
| 7. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | *ஆண்:325* | *பெண்:351* | *மொ:676* |
| 8. | உடற்பயிற்சி பயின்றவர்கள் *(Students)* | *ஆண்:45* | *பெண்:43* | *மொ:88* |
| 9. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | ***ஆண்:165*** | ***பெண்:325*** | ***மொ:490*** |
| 10. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | ***ஆண்:112*** | ***பெண்:274*** | ***மொ:386*** |
| 11. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | ***ஆண்:110*** | ***பெண்:274*** | ***மொ:384*** |
| 12. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ***ஆண்:60*** | ***பெண்:187*** | ***மொ:247*** |
| 13. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ***ஆண்:53*** | ***பெண்:171*** | ***மொ:224*** |
| 14. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ***ஆண்:44*** | ***பெண்:157*** | ***மொ:201*** |
| 15. | பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள் | ***ஆண்:16*** | ***பெண்:32*** | ***மொ:48*** |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.**மயிலானந்தன் அவர்களால் **322-**வது கிராமமாக **தொண்டமாந்துறை** கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் **22-02-2024-**ஆம் தேதியிலிருந்து **22.07.2024-**ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. தொண்டமாந்துறை கிராமத்தின் தொடக்கவிழா

***SKY YOGA CENTRE, DUBAI*** நிதி உதவியுடன் **திருச்சிராப்பள்ளி மண்டலம்**, **பெரம்பலூர்** மனவளக்கலை மன்ற அறக்கட்டளை, ***22-02-2024***-ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், **பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM. மயிலானந்தன்** அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும் **தொண்டமாந்துறை** கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.














**<u>உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்ச</u>**











## 5. மருத்துவ முகாம்

***28.03.2024** அன்று தொண்டமாந்துறை கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் **122** அன்பர்கள் கலந்துகொண்டனர்.*







## 6. மனநல ஆலோசனை முகாம்

*26.04.2024 அன்று **Dr.Bhuvaneshwari and Thiru.Kathiravan** அவர்களால்* **மன நல ஆலோசனை முகாம்** *நடத்தப்பட்டது. இம்முகாமில் மொத்தம் 54 அன்பர்கள் கலந்துகொண்டனர். மேலும் தனிநபர் ஆலோசனை 17 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*







## 7. மரக்கன்று வழங்குதல் & சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

14.07.2023 *அன்று தொண்டமாந்துறை கிராம மக்களுக்கு **Dr.Bhuvaneshwari & Mr.Sivaprakasam** அவர்களால் 150 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.*






## 8. மதுஒழிப்பு முகாம்

20.09.2023 *அன்று தொண்டமாந்துறை கிராம மக்களுக்கு* ***AAA Members & Dr.Bhuvaneshari*** *அவர்களால் மதுஒழிப்பு முகாம் நடத்தப்பட்டது. கிராம மக்கள் மொத்தம் 32 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*




## 9. மனைவிநல வேட்பு தினம்

15.07.2024 *அன்று தொண்டமாந்துறை கிராமத்தில் மனைவி நலவேட்பு தினம் நடத்தப்பட்டது. இதில் 35 தம்பதியினர் உட்பட 50 கிராம மக்கள் கலந்துகொண்டனர்.*






## *10. சர்வதேச யோகா தினம்*

*21.06.2024 அன்று தொண்டமாந்துறை கிராமத்தில் சர்வதேச யோகா தினம் நடத்தப்பட்டது. இதில் கிராம மக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.*






*11. அனுபவ உரை*

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | 97% of the Student Participants are good in studies and other Activities |
| 2 | Around 97% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 3 | 95% of the participants are able to eradicate worries and maintain a healthy life |
| 4 | 94% of the participants mental health has calmed due to the SKY Meditation |
| 5 | 94% of the participants are able to moralize their desire to be contented |
| 6 | Around 87% (282) of the participants have made progress in family peace |
| 7 | Around 87 % of the participants are out of the depression compared to before joining the program |
| 8 | Due to SKY Exercises and meditation- 163 participants cured of Joint Pain, 65 participants cure of Migraine and Headache, 5 Women Participants cured of Menstrual Problem (PCOD). |
| 9 | **97% of the participants are happy with the VSP Programme compared to only 34% before joining the program** |

## Feedback Trend



R. சாந்தி, தொண்டமாந்துறைகிராமம்

வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.



மனவளக்கலை யோகா பயிற்சி


உடலுக்கு, உடல் பயிற்சியும்
மனம், தியானமும்
உயிருக்கு. காயகல்ப பயிற்சியும்
கண்ணாடி பயிற்சியும், மூச்சு பயிற்சியும்,
கண்ணுக்கு கண் பயிற்சியும் முதலியனவற்றை நான் யோக பயிற்சி பெற்று வந்தேன். இதன்மூலம் உடல் நன்றாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்துக்கொள்கிறது. மனதிற்கு ஒரு அமைதி சூழல் இதன்மூலம் கிடைக்கிறது. நான் இதில் மிகவும் பயன் அடைந்து இருக்கிறேன். நான் ஒரு சர்க்கரை நோயாளி. யோக பயிற்சி எடுப்பதன்மூலம் மாத்திரையெல்லாம் எடுப்பதை நிறுத்திவிட்டு யோக பயிற்சி செய்து வருகிறேன். தினசரி காலை மாலை இரண்டு வேளையும் இந்த பயிற்சியில் கலந்துகொண்டு உடலை ஆரோக்கியமாக வைத்துகொள்கிறேன்.

சர்க்கரை நோய் மட்டுமல்லாமல் எனக்கு மூட்டு வலி பிரச்சனை இருந்தது. அதில் நான் பெரும் துயரம் அடைந்துகொண்டிருந்தபோதுதான் யோக பயிற்சியை எனது நெருங்கிய தோழி அறிமுகப்படுத்தினாள். அதில் தினந்தோறும் நான் கால்பயிற்சி செய்து வந்து கொண்டே இருந்தேன், முன்பு இருந்ததற்கு இப்பொழுது வலி குறைந்துள்ளது.

மனவளக்கலையை அய்யா அவர்கள் ஊருக்கு கொண்டு வந்து உலக சமுதாய சேவா [illegible] மனமார்ந்த நன்றிகளும் வணக்கமும் [illegible] R.சாந்தி

வாழ்க வையகம் * குரு வாழ்க * வாழ்க வளமுடன்

குருவே துணை



வாழ்க வளமுடன்

என் பெயர் : ர. சூரிய பிரகாஷ்
S/o ரவி
மாரியம்மன் கோவில் தெரு
தொண்டமாந்துறை
வேப்பந்தட்டை (வ)
பெரம்பலூர் (மா)

எங்கள் ஊரில் 22/02/24 தேதி அன்று வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலை யோகா துவக்கினார்கள். கிராமிய சேவை திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது இப்பயிற்சியில் நானும் கலந்து கொண்டேன். நான் முதுகு வலியால் அவதிப்பட்டு வந்தேன் மருத்துவமனைக்கு சென்று வந்தும் எந்த பயனும் தரவில்லை மனவளக்கலை யோகாவின் காலை 5 மணி முதல் 7 மணி வரை தினமும் பயிற்சி செய்து வந்தேன் கை பயிற்சி கால் பயிற்சி, மூச்சு பயிற்சி மகராசனம் இவை பயிற்சிகள் தொடர்ந்து செய்து வந்தேன். இப்பொழுது எனக்கு நன்றாக குணமாகிறது மேலும் காயகல்பம் பயிற்சி எனக்கு மிகவும் நன்றாக இருந்தது. எங்கள் ஊருக்கு கொண்டு வந்த பெரம்பலூர் அறக்கட்டளை இப்பயிற்சியை உருவாக்கி உலகத்துக்கே தந்த ஆசான் அவர்களுக்கு நன்றி. எங்கள் ஊரில் தங்கி பயிற்சி கொடுத்த ஆசிரியர் ஐயா இராமலிங்கம், இப்புலட்சுமி அம்மா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு
ர. சூரிய பிரகாஷ்

வாழ்க வையகம் - குரு வாழ்க. வாழ்க வளமுடன்.

வாழ்க வளமுடன்



என் பெயர். R. கலாவதி.
W/o M. ராஜேந்திரன்
மாதா கோயில் தெரு
தொண்டமாந்துறை (Post)
வேப்பந்தட்டை (T.K)
பெரம்பலூர் (D.t)

எங்கள் ஊரில் 22.02.24 ஆம் தேதி அன்று வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலை யோகா தவங்களைக் கிராமிய இலவச திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது. நானும் இந்த பயிற்சியில் கலந்து கொண்டேன். தினமும் காலை மாலை இரண்டு நேரமும் பயிற்சியில் கலந்து கொண்டேன். எனக்கு சர்க்கரை நீரிழிவு நோய் இருக்கிறது. மாத்திரை தினமும் சாப்பிட்டு கொண்டு தான் இருக்கிறேன். இந்த பயிற்சி செய்வதால் கொஞ்சம் நாட்களுக்கு குறைந்துள்ளது. தவம் செய்வதால் எனக்கு மனசு நிம்மதியாக இருக்கிறது. காய கல்பம் செய்வதால் எனக்கு உடம்பு நன்றாக இருக்கிறது. இந்த பயிற்சி எங்கள் ஊருக்கு கொண்டு வந்த பெரம்பலூர் அறக்கட்டளை, இப்பயிற்சியை உருவாக்கி உலகத்திற்கே தந்த ஆதன் அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கு நன்றி. பயிற்சி கொடுத்த ஆசிரியர் இராமலிங்கம் அவர்களுக்கும் திப்புலட்சுமி அம்மா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன். உலக சமுதாய சேவா சங்கத்திற்கும் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

வாழ்க வளமுடன்,

R. கலாவதி.

வாழ்க வளமுடன் M வாழ்க வையகம்

குரு வாழ்க.
குருவே துணை



வாழ்க வளமுடன் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை தாலுகா
தொண்டமாந்துறை கிராமம் K. பாலு எங்கள் ஊரில்
22. 2. 2024, உலக சேவா சங்கம் வேதாத்திரி மகரிஷி –
மனவளக்கலை யோகா கிராம சேவை திட்டத்தின் கீழ்
இலவசமாக மக்களுக்கு யோகா ஆரம்பித்தார்கள் நானும்
மனவளக்கலை யோகாவில் கலந்து கொண்டேன் காலை, மாலை
இரண்டு நேரமும் கலந்து கொண்டு பயிற்சி எடுத்தேன்
எனக்கு முன்னாடி உடலில் சர்க்கரை இரத்த அழுத்தம்
இருந்தது, இதனால் எனக்கு அடிக்கடி மயக்கம் உடல் சோர்வு.
இருந்தது, இப்போது யோகா செய்ததனால் இந்த வியாதி
முழுவதும் போய் விட்டது காயகல்ப பயிற்சி மகராசன் பயிற்சி
உடலை தளர்த்துதல் அக்குபிரசர் 14 பாயிண்ட் இந்த பயிற்சி
எல்லாம் தினமும் இரண்டு வேளையும் நன்றாக செய்துவந்தேன்
சில நேரங்களில் எனக்கு கொஞ்சம் கோபம் வரும் தற்போது
கோபம் குறைந்து விட்டது நான் அக்கினை தவம் துரிய தவம்
செய்து வந்துள்ளேன் இதனால் எனக்கு மன அமைதி கிடைத்து
உள்ளது வாழ்க வளமுடன்

இந்த பயிற்சியை உருவாக்கி எங்களுக்கு தந்த ஆசான்
அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கும் எங்கள்
ஊருக்கு இந்த பயிற்சியை கொண்டு வந்த பெரம்பலூர்
அறக்கட்டளைக்கும் இங்கு தங்கி எங்களுக்கு பயிற்சி கொடுத்த
ஆசிரியர் குழுவுக்கும் மனம் சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்

இப்படிக்கு
K. பாலு

வாழ்க வளமுடன் உ வாழ்க வையகம்

குரு வாழ்க
குருவே துணை



வாழ்க வளமுடன்
ஐயா. பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுகா தொண்டமாந்துறை
கிராமம் B.லலிதா எங்கள் ஊரில் 22.2.2024ல்
உலக சேவா சங்கம் வேதாத்திரி மகரிஷி மனவளக்கலை
யோகா கிராம சேவை திட்டத்தின் கீழ் இலவசமாக மக்களுக்கு
யோகா ஆரம்பித்தார்கள் நானும் மனவளக்கலை யோகாவில்
கலந்து கொண்டேன் காலை. மாலை இருவேளையும் கலந்து
கொண்டேன் எனக்கு என் உடலில் இருந்த இடுப்பு முட்டுவலி
கால் எரிச்சல் தலைவலி இது ஒன்றும் இல்லை தற்போது
நான் நலமாக இருக்கிறேன் நான் காயகல்பம், கைபயிற்சி
கால் பயிற்சி, மூச்சுபயிற்சி கண்பயிற்சி கபாலபதி
[illegible] பயிற்சி கண்ணாடி பயிற்சி பஞ்சபூத நவக்கிரகம்
தவம் பயிற்சி இவைகள் எல்லாம் நான் தவறாமல்
எடுத்து கொண்டேன் இதனால் நான் ஆரோக்கியமாகவும்
சந்தோஷமாகவும் மேலும் பயிற்சியை தொடர்ந்து செய்து
வருகிறேன் இதை நான் ஒரு, ஐந்து பேர்களுக்கு பயிற்சி
சொல்லி தந்தேன் இந்த பயிற்சியை உருவாக்கி தந்த ஆசான்
அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி. அவர்களுக்கும் உலக சமுதாய சேவா சங்கத்துக்கும் பெரம்பலூர்
அறக்கட்டளைக்கும் இங்கு ஐந்துமாதம் தங்கி இருந்து
எங்களுக்கு இந்த பயிற்சிகளை நன்றாகவே சொல்லி
கொடுத்த. ஐயா. ராமலிங்கம் குப்பு லட்சுமி அம்மாவுக்கும்
எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்

வாழ்க வளமுடன்.

இப்படிக்கு
B. லலிதா

## *12.* எதிர்காலத் திட்டங்கள்:

*ஆரோக்கியமும், அமைதியும் மிக்க* **தொண்டமாந்துறை** *கிராமம்,* **பெரம்பலூர்** *மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.*

## *13.* வாழ்த்து:

*தொண்டமாந்துறை கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,* ***பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன்*** *அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய* ***SKY Yoga Centre, Dubai-க்கும்,*** *இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த* **திருச்சிராப்பள்ளி** *மண்டல பொறுப்பாளர்களுக்கும்,* **பெரம்பலூர்** *மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள்* ***Prof.K.Paneerselvam & Prof.S.Kuppulakshmi****அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய* ***VSP நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு*** *உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.*

***உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை***
***உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.***
***உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே***
***உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.***

***-வேதாத்திரி மகரிஷி***

*தொண்டாற்றி இன்பம் காண்போம்!* *நன்றி, வாழ்க வளமுடன்!*

*குருவின் சேவையில்*
*WCSC-VSP இயக்குனரகம்*
*அறிவுத்திருக்கோயில், ஆழியார்*